# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 21 | 4 Pages | 22.08.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 21 | 4 பக்கங்கள் | 22.08.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## ஜெய்சங்கர் உள்பட 9 பேர் மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்பு



டெல்லி, ஆக. 22

மத்திய அரசின் வெளியுறவுத்துறை மந்திரியாக இருப்பவர் ஜெய்சங்கர். இவர் மாநிலங்களவை உறுப்பினராக இன்று பதவி ஏற்றுக்கொண்டார். இதன்மூலம் 2வது முறையாக ஜெய்சங்கர் மாநிலங்களவை எம்.பி.யாக பதவி ஏற்றுள்ளார். கடந்த 2019ம் ஆண்டு முதன்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். மேலும், பாபுபாய் ஜெசங்பாய் தேசாய் (குஜராத்), கேஷ்ரீதேவ்சிங் திக்விஜய் சங் ஜாலா (குஜராத்), நாகேந்த்ரா ராய் (மேற்கு வங்காளம்) ஆகியோர் பா.ஜனதா மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்றுக் கொண்டனர். திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தெரிக் ஓ'பிரைன், டோலா சென், சுகேந்து சேகர் ராய், பிரகாஷ் சிக் பராய்க், சமிருல் இஸ்லாம் ஆகிய ஐந்து பேரும் மாநிலங்களை எம்.பி.யாக பதவி ஏற்றனர். இவர்களுக்கு மாநிலங்களவை சேர்மன் ஜெக்தீப் தன்கார் பதவி பிரமாணம் செய்து வைத்தார். ஜெய்சங்கர் ஆங்கிலத்திலும், ஓ'பிரைன், சென், ராய் ஆகியோர் பெங்கால் மொழியிலும் பதவி ஏற்றனர்.

## 24 மணி நேரத்திற்குள் தொழில்நுட்ப காரணங்களை தூண்டியது யார்? சன்னி தியோல் விவகாரத்தில் காங்கிரஸ் கேள்வி



டெல்லி, ஆக. 22

பிரபல பாலிவுட் நடிகர் சன்னி தியோல். இவர் பாராளுமன்ற பா.ஜனதா எம்.பி.யாகவும் உள்ளார். கடந்த 2022ல் இருந்து பேங்க் ஆஃப் பரோடாவில் சுமார் 55.99 கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளார். சன்னி தியோல் தந்தை தர்மேந்திரா வங்கியில் தனி உத்திரவாதம் அளித்துள்ளார். கடனை திருப்பி செலுத்தாததால், ஜூகுவில் உள்ள அவரது பங்களாவை, வங்கி நேற்று முடக்கியது. அத்துடன் வருகிற 25ந்தேதி ஆன்லைன் மூலம் ஏலம் விடப்படும் என அறிவிப்பையும் வெளியிட்டது. ஆனால், இன்று காலை தொழில்நுட்ப காரணமாக ஏலம் அறிவிப்பு திரும்பப் பெறுவதாக வங்கி அறிவித்துள்ளது. இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. பா.ஜனதா எம்.பி. என்பதால் வங்கி உடனடியாக திரும்பப்பெற்றுள்ளது என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன. இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜெய்ராம் ரமேஷ் தனது டுவிட்டர் பக்கத்தில் ''56 கோடி ரூபாய் வாங்கிய கடனை கட்டத் தவறியதால், சன்னி தியோலின் பங்களா ஏலம் விடப்பட இருக்கிறது என்ற செய்தியை நேற்று நாட்டு மக்கள் கேட்டனர். இன்று காலை, 24 மணி நேரத்திற்குள், தொழில்நுட்ப குறைபாடு காரணமாக, வங்கி அதன் ஏல அறிவிப்பை திரும்பப்பெற்றது என்ற செய்தியை நாட்டு மக்கள் கேட்கின்றனர். இந்த 'தொழில்நுட்ப காரணங்களை' தூண்டியது யார் என்று ஆச்சரியமாக இருக்கிறதா?'' எனப் பதிவிட்டுள்ளார்.

## காங்கிரஸ் கட்சி செயற்குழுவில் மாற்றம்: பிரியங்கா காந்தி உள்பட புதியவர்களுக்கு வாய்ப்பு

புதுடெல்லி, ஆக. 22

காங்கிரஸ் கட்சியின் அங்கமான செயற்குழு முக்கிய விவகாரங்களில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் மிக்கது. அக்கட்சியின் புதிய தலைவராக 2022 அக்டோபரில் மல்லிகார்ஜுன கார்கே பொறுப்பேற்ற பிறகு முதல்




முறையாக செயற்குழு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய செயற்குழுவில், மல்லிகார்ஜுன கார்கே, சோனியாகாந்தி, ராகுல் காந்தி, மன்மோகன்சிங் உள்ளிட்ட தலைவர்களுடன் பிரியங்கா காந்தி வதேராவும் இடம் பெற்றுள்ளார். இதையடுத்து அவர் உத்தர பிரதேச காங்கிரஸ் கட்சியின் பொறுப்பாளர் பதவியிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, ஏ.கே.அந்தோனி, அம்பிகா சோனி, திக்விஜய் சிங், அஜய் மாக்கன், ப.சிதம்பரம் ஆகியோரும் புதிய செயற்குழுவில் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். தீபாதாஸ் முன்ஷி, சையத் நஸீர் ஹுசைன், ஆனந்த் சர்மா, முகுல் வாஸ்னிக், சரண்ஜித் சிங் சன்னி உள்ளிட்ட புதிய முகங்களுக்கும் செயற்குழுவில் வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளது. சோனியாவின் தலைமைக்கு எதிராக விமர்சனங்களை எழுப்பிய சசி தரூர், ராஜஸ்தான் முதல்மந்திரி அசோக் கெலட்டுடன் மோதல் போக்கை கடைபிடித்து வரும் சச்சின் பைலட் ஆகியோரும் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

# நெம்மேலியில் ரூ.4,276 கோடியில் 3வது கடல் குடிநீர் திட்டம்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஆக. 22

சுத்திகரிப்பு ஆலையின் பணிகள் ரூ.1516 கோடியே 82 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வந்தது. 2ம் கட்ட கடல் குடிநீர் திட்டத்தை அடுத்த மாதம் (செப்டம்பர்) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார்.

சென்னையில் குடிநீர் பற்றாக் குறையை போக்கும் வகையில் கடந்த 2003,2004ம் ஆண்டு தொலை நோக்கு திட்டமான கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன்படி மீஞ்சூர் காட்டுப்பள்ளி மற்றும் கிழக்கு கடற்சாலையில் நெம்மேலி என இரண்டு இடங்களில் தினமும் தலா 10 கோடி லிட்டர் (100 மில்லியன்லிட்டர்) கொள்திறன்கொண்ட கடல்நீரை குடி நீராக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை மக்களுக்கு கடல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த இரு சுத்திகரிப்பு நிலையங்களும் சென்னையின் மொத்த குடிநீர் தேவையில் 20 சதவீதத்தை பூர்த்தி செய்து வந்தன. இந்நிலையில் நெம்மேலியில் மேலும் ஒரு 2வது திட்டமாக கடல்நீரை குடிநீராக்கும் நிலையம், எடப்பாடி பழனிசாமி ஆட்சியின் போது 2019ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. 15 கோடி லிட்டர் (150 மில்லியன் லிட்டர்) கொள்ளளவு கொண்ட இந்த சுத்திகரிப்பு ஆலையின் பணிகள் ரூ.1516 கோடியே 82 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வந்தது. இந்த பணிகள் அனைத்தும் இப்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. கடல்சார் பணிகள், இயந்திரவியல் மற்றும் மின்சார கருவிகள் நிறுவும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. கடல்நீரை குழாய் மூலம் சுத்திகரிப்பு நிலையத்துக்கு கொண்டு வருவது நிராகரிக்கப்பட்ட உவர் நீரை கடலுக்குள் விடும் குழாய்கள், நீர்த்தேக்க தொட்டி, உந்து நிலையம் அமைப்பது ஆகிய பணிகளும் முடிந்துவிட்டது. இந்த 2ம் கட்ட கடல் குடிநீர் திட்டத்தை அடுத்த மாதம் (செப்டம்பர்) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். இந்நிலையில் ரூ.4,276 கோடி செலவில் தினமும் 400 மில்லியன் லிட்டர் (40 கோடி லிட்டர்) கடல் நீரை குடிநீராக்கி சுத்திகரித்து வினியோகிப்பதற்காக 3வது புதிய குடிநீர் ஆலை அமைக்கப்பட உள்ளது. இந்த புதிய குடிநீர் ஆலை அமைப்பதற்கான இடம் நெம்மேலி அருகே பேரூரில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிநீர் திட்டமான இந்த கடல் குடிநீர் சுத்திகரிப்பு திட்டத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (செவ்வாய்க்கிழமை) அடிக்கல் நாட்ட உள்ளார்.




இந்த திட்டத்தின் மூலம் தாம்பரம் மாநகர மக்களுக்கும் சென்னையின் தென் மேற்கு பகுதியில் உள்ள 35 பகுதிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட கடல் குடிநீர் வழங்க முடியும். அதாவது இந்த திட்டத்தின் மூலம் 22 லட்சத்து 60 ஆயிரம் பேர் பயன் அடைவார்கள். 42 மாதங்களில் இந்த திட்டத்தை முடிக்க வேண்டும் என்று ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அகில பாரத இந்து மகா சபா சார்பில் கலெக்டரிடம் புகார் மனு

திருப்பூர், ஆக. 22

அகில பாரத இந்து மகா சபா சார்பாக அவிநாசி புதிய பேருந்து நிலையத்துக்கு பின்புறமாக உள்ள புறம்போக்கு நிலத்தை அபகரிக்க நினைக்கும் கிறிஸ்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூறி திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜிடம் அகில பாரத இந்து மகாசபா திருப்பூர் மாவட்ட தலைவர் மாநில இளைஞரணி செயலாளர் வல்லபை பாலா புகார் மனு வழங்கினார் புகாரை பெற்றுக் கொண்ட மாவட்ட கலெக்டர் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உத்தரவிட்டார் அருகில் மாவட்ட பொதுச் செயலாளர் ரமேஷ். மாநில ஐடி வின் செயலாளர் அண்ணாச்சி சதீஷ். மாவட்ட அமைப்பாளர் முகிலன். மாவட்ட இளைஞரணி தலைவர் பிரதீப். மாவட்ட வர்த்தக அணி தலைவர் மனிஷ்.மற்றும் சிவகுருநாதன். ஏழுமலை விக்கி.மாவட்ட நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்



## அண்டா, அண்டாவாக வீணான உணவு: நிர்வாகிகளின் அலட்சியம் என தொண்டர்கள் குமுறல்

மதுரை, ஆக. 22

மதுரையில் அதிமுக மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் லட்சக்கணக்கான தொண்டர்கள் மதுரையில் காலையில் இருந்தே குவிந்த வண்ணம் இருந்தனர். அவர்கள் பட்டினியாக கிடந்து விடக்கூடாது என்பதால் மூன்று கூடங்கள் அமைத்து, சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமையல் காரர்களுடன் சாம்பார் சாதம், புளி சாதம் செய்து தொண்டர்களுக்கு வழங்கிட மேலிடம் அறிவுறுத்தியிருந்தது. ஆனால், நிர்வாகிகளின் அலட்சியத்தால் அண்டா, அண்டாவாக உணவு வீணாகியுள்ளது. பல தொண்டர்கள் சாப்பிடுவதற்கு சாப்பாடு கிடைக்காமல் ஒருபுறம் அல்லாட, மறுபுறம் இதுபோன்ற நடந்ததுதான் வேதனையிலும் வேதனை என ஒரு தொண்டர் தனது குமுறலை வெளிப்படுத்தியுள்ளார். மதியம் கடும்பசியால் சாம்பார், புளிசாதங்கள் பறந்தோட, பல தொண்டர்களை சாம்பாரை மட்டும் குடித்த வேதனையும் நடந்துள்ளது. இதற்கிடையே மூன்று கூடங்களில் ஏராளமான உணவுகள் (சுமார் 40 அண்டா) கொட்டப்பட்டுள்ளன. இதுகுறித்து அதிமுக தொண்டர் ஒருவர் மனக்குமுறலுடன் தெரிவிக்கையில் ''மேலிடம் நல்ல சாப்பாடு போடச் சொன்ன பிறகும், மாஸ்டர்கள் சரியில்லாமல் போனதால், சாப்பிடு சரியில்லை. சாப்பாட்டில் பூசணம் பூத்துள்ளது,

100 அண்டா சோறு அப்படியே உள்ளது. யார் சாப்பிடுவார்கள். வாயில் வைத்தால் ஒன்றுமே இல்லை'' என்றார் தலைமை சரியாக செயல்பட சொன்ன பிறகும், நிர்வாகிகளின் மோசமான செயல்பாடுகளால், உணவுகள் இருந்தும், தொண்டர்கள் சாப்பிட முடியாது நிலை ஏற்பட்டது.



## தி.மு.க.வின் மக்கள் விரோத போக்கால் அ.தி.மு.க., கூட்டணிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது ஜி.கே.வாசன்

பல்லடம், ஆக. 22

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவன தலைவர் ஜி.கே.வாசன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: காவேரி நதி நீர் பிரச்சினை என்பது தஞ்சை டெல்டா பகுதிக்கு உயிர் பிரச்சினை. கர்நாடக காங்கிரஸ் அரசிடம் தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீர் பெற்று தர வேண்டும். நீட் தேர்வை பொறுத்தவரையில் இந்திய அளவில் தமிழக மாணவர்கள் வருடத்திற்கு வருடம் மற்ற மாநில மாணவர்களுக்கு சவால் விடும் வகையில் அறிவு திறனில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். அவர்களது அறிவு திறனை பயன்படுத்தும் வகையில் அவர்களுக்கு தமிழக கல்வி துறை ஊக்கம் அளிக்க வேண்டும். ஆனால் ஊக்கம் அளிக்காமல் பின் தள்ள நினைக்கிறது. மாணவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டியது கல்வி துறையின் கடமை ஆகும். எல்லா மாணவர்களும் நன்கு படித்து தேர்ச்சி அடைய வேண்டும். தொடர்ந்து நீட் தேர்வில் வெற்றி பெற முடியவில்லை என்றால் மாணவர்களின் நன்மை கருதி வேறு துறையில் வாய்ப்பை ஏற்படுத்தி தர ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன் வர வேண்டும். நீட் தேர்வால் மாணவர்கள், பெற்றோர் உயிரிழப்பு ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். கல்வியில் அரசியலை புகுத்த கூடாது. தி.மு.க.வின் பல்வேறு மக்கள் விரோத போக்கால் அ.தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. பாராளுமன்றத்தில் அதிக இடங்களில் வெற்றி பெறுவோம். தேசிய அளவில் அ.தி.மு.க. பெரிய கட்சியாக திகழ்கிறது. அ.தி.மு.க. எழுச்சி மாநாட்டில் லட்ச க்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டுள்ளனர். இது அ.தி.மு.க.வின் பலத்தை பறைசாற்றுகிறது. இது கூட்டணிக்கு மிகப்பெரிய வலுவை சேர்த்து வெற்றியை சேர்க்கும். அ.தி.மு.க., பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதற்கான அங்கீகாரத்தை இந்த மாநாடு எடுத்துகாட்டுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வெள்ளகோவிலில் லாட்டரி சீட்டு விற்றவர் கைது

வெள்ளகோவில், ஆக. 22

மூர்த்தி என்பவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டை விற்பனை செய்து கொண்டிருந்தார். வெள்ளகோவில் சுற்றுவட்டார பகுதியில் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

வெள்ளகோவில் சுற்று வட்டார பகுதியில் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது புதுப்பை என்ற இடத்தில் தாராபுரம் பகுதியைச் சேர்ந்த தண்டபாணி மகன் மூர்த்தி(வயது 47) என்பவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டை விற்பனை செய்து கொண்டிருந்தார். இதையடுத்து மூர்த்தியை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கால்நடைத்துறை அதிகாரிகள் ஆய்வு

உடுமலை, ஆக. 22

வேதனை அடைந்த விவசாயி தனக்கு ஒன்றரை லட்சத்துக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறினார். பெரியசாமி என்பவர் வளர்த்து வந்த ஆடுகளை வெறிநாய்கள் கடித்துக்கொன்றன.



திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த சின்ன வீரம்பட்டியில் பெரியசாமி என்பவர் வளர்த்து வந்த ஆடுகளை வெறிநாய்கள் கடித்துக்கொன்றன. இதையடுத்து பெரியசாமி உடுமலை காவல்துறை , உடுமலை வட்டாட்சியர் மற்றும் கால்நடைத்துறையினருக்கு தகவல் தெரிவித்த நிலையில் விரைந்து வந்த கால்நடைத்துறை உதவி இயக்குனர் ஜெயராம் பார்வையிட்டு சம்பவம் குறித்து கேட்டு அறிந்தார்.

வேதனை அடைந்த விவசாயி தனக்கு ஒன்றரை லட்சத்துக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் பார்வையிட்டு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கோவையில் தயாராகும் புதிய வடிவிலான விநாயகர் சிலைகள்

கோவை, ஆக. 22

சிலையின் தாங்கு திறனை உறுதி செய்வதற்காக உட்புறத்தில் சவுக்கு கட்டைகளை பயன்படுத்தி உள்ளோம். எங்களிடம் 2 அடி முதல் 10 அடி உயரம் வரை பிள்ளையார் சிலைகள் விற்பனைக்காக தயார்நிலையில் உள்ளன.



விநாயகர் சதுர்த்தி விழா அடுத்த மாதம் 18ந் தேதி விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. அப்போது பக்தர்கள் வீட்டில் சிறிய அளவிலான பிள்ளையார் சிலைகள் வைத்து வழிபடுவது வழக்கம். இதுதவிர பொது இடங்களிலும் பெரிய வடிவில் விநாயகர் சிலைகளை பிரதிஷ்டை செய்து பூஜைகள் செய்து வழிபாடு நடத்துவர். கோவை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சுண்டக்காமுத்தூர், செல்வபுரம், தெலுங்குபாளையம், புட்டுவிக்கி சாலை, கவுண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பிள்ளையார் சிலைகள் தயாரிப்புபணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. அங்கு சனீஸ்வரருடன் அமர்ந்திருக்கும் பிள்ளையார், விவசாய விநாயகர், கடல் கன்னி உருவத்தில் அருள்பாலிக்கும் பிள்ளையார், சிங்க வாகனங்களில் எழுந்தருளிய விநாயகர். முருகன் புல்லட் ஓட்ட பின்சீட்டில் பயணிக்கும் பிள்ளையார், ராஜகணபதி, டிராகனில் வீற்றிருக்கும் விநாயகர், மயில் மீது அமர்ந்த பிள்ளையார், சிவன் சிலையை ஏந்தி நிற்கும் பாகுபலி விநாயகர் என்று பல்வேறு வடிவங்களில் சிலைகள் வடிக்கப்பட்டு வருகின்றன. கோவையில் விநாயகர் சிலைகளை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் கலைஞர்கள் கூறுகையில், நாங்கள் வீடுகளில் வைத்து வழிபடுவதற்காக களிமண் சிலைகளையும், பொதுஇடத்தில் வைப்பதற்காக பிரமாண்ட வடிவில் சிலைகளையும் தயாரித்து வருகிறோம். நாங்கள் வடிவமைக்கும் விநாயகர் சிலைகள்சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் இருக்கும். அதாவது தண்ணீரில் எளிதாக கரையும் கிழங்கு மாவு, ஓடக்கல் மாவு, பேப்பர்கூழ் ஆகியவற்றை பயன்படுத்தி சிலைகள் தயார் செய்யப்படுகின்றன. சிலையின் தாங்கு திறனை உறுதி செய்வதற்காக உட்புறத்தில் சவுக்கு கட்டைகளை பயன்படுத்தி உள்ளோம். அப்படி தயாராகும் சிலைகளை 2, 3 நாட்கள் காயவைத்து, அதன்பிறகு சிமெண்ட் பேப்பர் ஒட்டி, அதில் வாட்டர் கலர் மூலம் பெயிண்ட் அடித்து சிலைகள் செய்கிறோம். அவற்றில் செயற்கை ரசாயனங்கள் மற்றும் எனாமல் கலப்பது இல்லை. எங்களிடம் 2 அடி முதல் 10 அடி உயரம் வரை பிள்ளையார் சிலைகள் விற்பனைக்காக தயார்நிலையில் உள்ளன. தமிழகம் முழுவதிலும் விநாயகர் சிலைகள் செய்வதற்கான மூலப்பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்து உள்ளது. எனவே பிள்ளையார் சிலைகளின் விலையும் தற்போது சிறிய அளவில் உயர்த்தப்பட்டு உள்ளது. அதன்படி சிறிய அளவிலான சிலைகள் ரூ.200 முதல் ரூ.2 ஆயிரம் வரையும், 10 அடி உயரம் உடைய சிலைகள் ரூ. 10 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையும் விற்கப்பட்டு வருகிறது.

கோவையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கடந்த மே மாதம் முதலே பணிகளை தொடங்கி விட்டோம். எங்களுக்கு கோவை மட்டுமின்றி திருப்பூர், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இருந்தும் ஆர்டர்கள் வந்து குவிந்து உள்ளன என தெரிவித்தனர். கோவை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பல்வேறு வடிவங்களில் பிள்ளையார் சிலைகள் வடிவமைக்கப்பட்டு வருவது பொதுமக்களிடம் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# 4வது குடிநீர் திட்டம் மூலம் 24 மணி நேரமும் குடிநீர் வினியோகம்: முதல்கட்ட பணிகள் விரைவில் தொடக்கம்

திருப்பூர், ஆக. 22


4வது குடிநீர் திட்டம் ரூ.1,120½ கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 20, 30, 44, 51 ஆகிய 4 வார்டுகளில் மக்கள் அதிகம் உள்ள வார்டுகளாகும். அதனால் அந்த வார்டுகளில் இந்த பணிகள் முதல்கட்டமாக தொடங்கப்பட உள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 4வது குடிநீர் திட்டம் ரூ.1,120½ கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே ஆழ்குழாய் கிணறு மூலமாக தண்ணீர் உறிஞ்சப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு திருப்பூர் மாநகராட்சி பகுதிக்கு குழாய் மூலம் கொண்டு வரப்பட்டு வினியோகம் செய்யும் பணிகள் பகுதி வாரியாக தொடங்கி நடந்து வருகிறது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் என்பது 60 வார்டுகளில்உள்ளகுடியிருப்புகள், தொழில் நிறுவனங்களுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்குவதாகும். வார்டு வாரியாக பகிர்மான குழாய்கள் இணைப்பு பணிகள் முடிந்து மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றி வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு சில வார்டுகளில் மட்டும் முழுமையான அளவில் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் 4வது குடிநீர் திட்டத்தில் 4 வார்டுகளில் மட்டும் 24 மணி நேரம் தண்ணீர் வினியோகம் செய்வதற்கான பணிகள் தொடங்கப்படும் என்று மாமன்ற கூட்டத்தில் மேயர் தினேஷ்குமார் அறிவித்தார். அதன்படி 20,30, 44, 51 ஆகிய 4 வார்டுகளில் 24 மணி நேரம் குடிநீர் வினியோகம் செய்வதற்கான ஆரம்பகட்டப்பணிகள் தொடங்கப்பட உள்ளது. மேல்நிலைத்தொட்டிகளில் தண்ணீர் ஏற்றப்பட்டு, மேற்கண்ட 4 வார்டுகளில் குடியிருப்புகளில் குழாயை திறந்தால் 24 மணி நேரம் தண்ணீர் வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இதற்காக மேல்நிலைத் தொட்டிகளில் தண்ணீர் அளவு குறைந்தாலும் உடனடியாக நிரப்பும் பணிகள், குடிநீர் வினியோகம் செய்யும்போது குடிநீரின் அளவை கண்டறியும் ஸ்கேடா கருவிகள் பொருத்தும் பணிகள் நடைபெற உள்ளது. 20, 30, 44, 51 ஆகிய 4 வார்டுகளில் மக்கள் அதிகம் உள்ள வார்டுகளாகும். அதனால் அந்த வார்டுகளில் இந்த பணிகள் முதல்கட்டமாக தொடங்கப்பட உள்ளதாக மேயர் தினேஷ்குமார் தெரிவித்தார்.

# திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் மாணவிகள் பேரவை தொடக்க விழா

திருப்பூர், ஆக. 21

2023,24 ஆண்டுக்கான மாணவிகள் பேரவை தொடக்க விழா நடைபெற்றது. மாணவிகளுக்கு வாழ்க்கையில் நாம் என்ன ஆகப் போகிறோம் என்ற குறிக்கோள் இருக்கவேண்டும்




திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 202324 ஆண்டுக்கான மாணவிகள் பேரவை தொடக்க விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் வசந்தி வரவேற்றார். கல்லூரியின் தாளாளரும், கோவை மண்டல வீட்டுவசதி துணைப் பதிவாளருமான அர்த்தநாரீஸ்வரன் தலைமை வகித்தார். இதில், பேரவைத்தலைவியாக ஸ்ரீநிதி (பி.காம்., 3ம் ஆண்டு), துணைத் தலைவியாக ஹரிணி(பி.எஸ்சி., கணினி அறிவியல் 3ம்ஆண்டு), செயலாளராக சுரேகா (பி.காம்., 2ம் ஆண்டு) ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். விழாவில் சிறப்பு விருந்தினராகப்பங்கேற்றகோவை லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனத்தின் மனித வளங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நிர்வாகி டெய்ஸி மேரி பேசியதாவது: மாணவிகளுக்கு வாழ்க்கையில் நாம் என்ன ஆகப் போகிறோம் என்ற குறிக்கோள் இருக்கவேண்டும். படிப்புக்கு வயது தடை இல்லை. படிப்பை நம்மிடம் இருந்து யாரும் வாங்க முடியாது என்றார். நிகழ்ச்சியில் எத்தியோப்பியா நாட்டு பேராசிரியர் கருணாகரன், கல்லூரி நிர்வாக அலுவலர் நிர்மல்ராஜ், கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உ.பி முதல்வர் காலில் விழுந்த விவகாரம் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்த நடிகர் ரஜினிகாந்த்

உத்திரபிரதேசம், ஆக. 22

ரஜினிகாந்த் தனது பயணங்களை முடித்துக் கொண்டு, விமானம் மூலம் இன்று இரவு சென்னை திரும்பினார். உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் காலில் விழுந்தது குறித்து நடிகர் ரஜினிகாந்த் விளக்கம் அளித்தார்.



இமயமலைக்கு ஆன்மிக யாத்திரை சென்றுள்ள நடிகர் ரஜினிகாந்த் அங்கு பல்வேறு இடங்களை பார்வையிட்டு வந்தார். அப்போது, உத்தரபிரதேச மாநிலம் லக்னோவுக்கு வந்த நடிகர் ரஜினிகாந்த், அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தை நேற்று முன்தினம் சந்தித்தார். அப்போது ரஜினிகாந்த் யோகி ஆதித்யநாத்தின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றார். நடிகர் ரஜினிகாந்த்தின் இந்த செயல் சர்ச்சைக்குள்ளானது. பல்வேறு தரப்பினரிடையே இதுகுறித்து விமர்சனங்கள் எழும்பியது. அதனைத் தொடர்ந்து அயோத்தி சென்ற ரஜினிகாந்த், அங்குள்ள அனுமன் கோவிலில் தரிசனம் செய்தார். பின்னர் ரஜினிகாந்த் அயோத்தியில் ராமர் கோவில் அமையவுள்ள இடத்துக்கு, தனது மனைவி லதாவுடன் சென்றார். அங்கு கட்டப்பட்டு வரும் ராமர் கோவிலை பார்வையிட்டார். மேலும் அங்குள்ள மதகுருமார்களை சந்தித்து ஆசி பெற்றார். மேலும் அங்கு ராமர் தரிசனமும் செய்தார். ரஜினிகாந்த் தனது பயணங்களை முடித்துக் கொண்டு, விமானம் மூலம் இன்று இரவு சென்னை திரும்பினார். அப்போது, நடிகர் ரஜினிகாந்த் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் காலில் விழுந்தது குறித்து நடிகர் ரஜினிகாந்த் விளக்கம் அளித்தார். இது குறித்துஅவர்கூறுகையில், "ஜெயிலர் படத்தை மாபெரும் வெற்றிப் படமாக்கிய என்னை வாழ வைத்த செய்வங்களான தமிழ் மக்களுக்கும், உலகின் அனைத்து மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வயது குறைவாக இருந்தாலும் சன்னியாசியாக இருந்தால் காலில் விழுவேன்" என்றார்.

# பருப்பு வகைகள் விலை உயர வாய்ப்பு

சென்னை, ஆக. 22

வரும் நாட்களில் தக்காளி உள்பட காய்கறிகளின் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பருப்பு வகைகள் எதிர்பார்த்த அளவுக்கு வருவது நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

நாடு முழுவதும் தக்காளி விலை சில தினங்களுக்கு முன்பு உயர்ந்த நிலையில் தற்போது கணிசமான அளவுக்கு குறைந்து விட்டது. வரும் நாட்களில் தக்காளி உள்பட காய்கறிகளின் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் பருப்பு வகைகளின் விலை உயர வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. வடமாநிலங்களில்பெய்து வரும் மழை காரணமாக பல இடங்களில் பருப்பு வகைகள் உற்பத்தி முடங்கி உள்ளது. இதனால் பருப்பு வகைகள் எதிர்பார்த்த அளவுக்கு வருவது நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எனவே வரும் நாட்களில் பருப்பு வகைகளின்விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இது பண வீக்கத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

# நீட் தேர்வுக்கு எதிராக மதுரையில் 24ந்தேதி போராட்டம்: திமுக அறிவிப்பு

மதுரை, ஆக. 22

அதிமுக மாநாடு நடைபெற்றால் லட்சக்கணக்கான அதிமுக தொண்டர்கள் மதுரையில் கூடினர் மாநாடு உடன் போராட்டம் நடத்தப்பட்டால் பாதுகாப்பு வழங்க முடியாத நிலை ஏற்பட்டதால் தள்ளிவைப்பு



தி.மு.க. நேற்று நடத்திய போராட்டம் மதுரையில் மட்டும் நடைபெறவில்லை. அ.தி.மு.க. மாநாடு நடைபெற்றதாலும், போலீசார் உரிய பாதுகாப்பு வழங்க முடியாத நிலை ஏற்பட்டதாலும், மதுரையில் மட்டும் போராட்டம் நடைபெறவில்லை. இதனால் மதுரையில் வருகிற 23ந்தேதி (புதன்கிழமை) உண்ணாவிரத போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் 24ந்தேதி போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மதுரை அண்ணாநகர், அம்பிகா தியேட்டர் அருகில் உள்ள ரவுண்டானாவில் அமைச்சர் மூர்த்தி மற்றும் மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் போராட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, 'நீட்' தேர்வை ரத்து செய்ய மறுக்கும் மத்திய பா.ஜ.க. அரசையும், தமிழ்நாடு கவர்னரையும் கண்டித்து தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் மதுரையை தவிர்த்து தமிழ்நாடு முழுவதும் நேற்று உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்ற உண்ணாவிரதத்துக்கு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார். உண்ணாவிரதத்தை தி.மு.க. பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைத்தார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். முன்னதாக 'நீட்' தேர்வு காரணமாக தமிழ்நாட்டில் உயிரிழந்த மாணவர்களின் உருவப்படங்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். உண்ணாவிரத போராட்டத்தில், அமைச்சர்கள் சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், எம்.பி.க்கள் தயாநிதிமாறன், டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு, தமிழச்சி தங்க பாண்டியன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, தி.மு.க. மாவட்ட செயலாளர் சிற்றரசு, மாணவர் அணி செயலாளர் எழிலரசன், மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் எழிலன் நாகராஜன், இளைஞர் அணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல், தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, செயல் தலைவர் டாக்டர் விஷ்ணுபிரசாத் எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், திராவிட விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். தமிழகம் முழுவதும் மாவட்டம் தோறும் இந்த போராட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# அவினாசி, சேவூர் ரோட்டில் நடந்து சென்ற பெண்ணிடம் செல்போன் பறிப்பு

அவினாசி, ஆக. 22

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் சரண்யாதேவி கையில் வைத்திருந்த செல்போனை பறித்து சென்றார். புகாரின்பேரில் அவினாசி போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

திருப்பூர் முத்தனம்பாளையத்தை சேர்ந்த மணிமுத்து மனைவி சரண்யா தேவி(42) .இவர் நேற்று பிற்பகல் அவினாசி சேவூர் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது இவருக்கு பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் சரண்யாதேவி கையில் வைத்திருந்த செல்போனை பறித்து சென்றார். பதறிப்போன அவர் திருடன், திருடன் என்று சத்தம் போட்டதால் அப்பகுதியில் இருந்த சிலர் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை பிடிக்க முயன்றனர். இருப்பினும் அந்த நபர் மின்னல் வேகத்தில் தப்பி சென்றார். இது குறித்த புகாரின்பேரில் அவினாசி போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# அவினாசியில் நள்ளிரவில் பரபரப்பு: கத்தியை காட்டி மிரட்டி தொழிலாளியிடம் பணம் பறிப்பு

அவினாசி, ஆக. 22

பாபி சர்தாரிடமிருந்த ரூ. 5ஆயிரம் மற்றும் 20 இரும்பு ராடுகளை பறித்து கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

இரவில் பாபி சர்தார் தங்கி இருந்த அறை கதவை 3 மர்ம நபர்கள் முகத்தை துணியால் மறைத்துதட்டி உள்ளனர்.

மேற்கு வங்காளத்தை சேர்ந்தவர் பாபி சர்தார் (வயது 25). இவர் அவிநாசி மங்கலம் ரோட்டில் கட்டுமான பணிகள் நடந்து வரும் கட்டிடத்தில் வேலை பார்த்து வருகிறார்.

அங்கு இரவில் அவர் தங்கி இருந்த அறை கதவை 3 மர்ம நபர்கள் முகத்தை துணியால் மறைத்துதட்டி உள்ளனர். கதவை திறக்காததால் அந்த நபர்கள் சிமெண்ட் சீட்டை உடைத்து உள்ளே புகுந்து அங்கிருந்த காய்கறி நறுக்கும் கத்தியை எடுத்து பாபி சர்தார் கழுத்தில் வைத்து மிரட்டி அவரிடமிருந்த ரூ. 5ஆயிரம் மற்றும் 20 இரும்பு ராடுகளை பறித்து கொண்டு தப்பி சென்றுள்ளனர். இது குறித்த புகாரின் பேரில் அவினாசி போலீசார் வழக்குபதிவு செய்து மர்மநபர்களைவலைவீசி தேடி வருகின்றனர்.

# வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகங்களில் அலைமோதிய கூட்டம்



கோவை, ஆக. 22

வடவள்ளி, தமிழக வணிகவரி மற்றும் பதிவுத் துறை அலுவலகம் சமீபத்தில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் சுப முகூர்த்த நாட்களில் அதிகளவில் பத்திரப்பதிவுகள் நடக்கும் என்பதால் அன்றைய தினங்களில் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்வது வழக்கம். இதன்படி ஆடிப்பெருக்கை முன்னிட்டு கடந்த 3ந்தேதி ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதலாக 50 முன்பதிவு வில்லைகள் வழங்கப்பட்டன. இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அதேபோல சுபமுகூர்த்த நாளான இன்று அதிக அளவில் பத்திரப்பதிவு நடக்கும் என்பதால் சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதலாக 50 பேருக்கு முன்பதிவு டோக்கன் வழங்கப்பட்டது. கோவையில் வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் 120 டோக்கன்களும், தொண்டாமுத்தூரில் 140 டோக்கன்களும் முன்பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இதேபோல் மற்ற சார்பதிவாளர் அலுவ லகங்களிலும் கூடுதலாக 50 டோக்கன்கள் வினியோகம் செய்யப்பட்டன. இதனால் சுபமுகூர்த்த தினமான இன்று சார்பதிவாளர் அலுவலகங்களில் கூட்டம் அலைமோதியது.

# கழுத்தில் சில்வர் பாத்திரம், மண்வெட்டியை மாலையாக அணிந்து கலெக்டர் அலுவலகத்திற்கு மனு அளிக்க வந்த கணவன், மனைவி




கடலூர், ஆக. 22

கடலூர் கலெக்டர் அலுவலகத்தில் இன்று குறை கேட்பு கூட்டம் நடைபெற்றது. குறிஞ்சிப்பாடி கருங்குழி பகுதியை சேர்ந்த ராஜேந்திரன், அவரது மனைவி ஆகியோர் மனு அளிக்க வந்தனர். பதாகைகள் ஏந்தி நின்றிருந்தனர். மேலும் ராஜேந்திரன் சில்வர் பாத்திரம் மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை மாலையாக கழுத்தில் மாட்டிக் கொண்டிருந்தார். அப்போது அவர் வைத்திருந்த மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் கிராமத்தில் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் என் மனைவிக்கு வேலை வேண்டி விண்ணப்பித்திருந்தேன். ஆனால் இதுநாள் வரை என் மனைவிக்கு இந்த திட்டத்தில் வேலை தர மறுக்கின்றனர். பலமுறை இது சம்பந்தமாக அதிகாரிகளிடம் கேட்டறிந்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மேலும் வேலை அட்டை பதிவு செய்யவில்லை. ஆனால் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் அவரது உறவினர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையில் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் இந்த வேலை திட்டத்தில் சேர்த்து முறைகேடு செய்துள்ளனர். மேலும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் வேலைக்கு வராமல் வேலை செய்ததாக முறைகேடாக பண பரிவர்த்தனை செய்துள்ளனர். ஆகையால் இது சம்பந்தமாக உரிய விசாரணை நடத்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் அனைவருக்கும் சமமாக வேலை வழங்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் அவர் கூறியிருந்தார்.

100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் என் மனைவிக்கு வேலை வேண்டி விண்ணப்பித்திருந்தேன். வேலைக்கு வராமல் வேலை செய்ததாக முறைகேடாக பண பரிவர்த்தனை செய்துள்ளனர். 100 நாள் வேலை திட்டத்தில் வேலை வழங்க வேண்டும். 18 வயது பூர்த்தி அடையாத சிறுவர்களை வேலையில் அமர்த்திய ஊராட்சி மன்ற தலைவரை கண்டித்து

# தருமபுரி, அரூர் இடையே 4 வழிச்சாலை பணிகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு



தர்மபுரி, ஆக. 22

தருமபுரிஅரூர்இடையே இருவழி சாலை 4 வழிச்சாலையாக மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. சாலை பணிகளை சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்கு நர் கோதண்டராமன் சாலையின் நீளம், அகலம், கனம், சரிவு மட்டம் மற்றும் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

தருமபுரி நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத் திற்கு உட்பட்ட 202122ம் ஆண்டிற்கான முதல்அமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி அரூர் இடையே இருவழி சாலை 4 வழிச்சாலையாக மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த சாலை பணிகளை சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கோதண்டராமன் சாலை யின் நீளம், அகலம், கனம், சரிவு மட்டம் மற்றும் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது சேலம் நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பரா மரிப்பு கண்காணிப்பு பொறியாளர் பன்னீர் செல்வம், சேலம் நெடுஞ்சா லைத்துறை தரக்கட்டுப்பாடு கோட்டப்பொறியாளர் வத்சலா வித்யானந்தி, தருமபுரி நெடுஞ்சாலைத் துறை பராமரிப்புகோட்டபொறியாளர் நாகராஜி, உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் உடன் உடனிருந்தனர்.

# திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் வரிவிலக்கு கோரி முன்னாள் துணை ராணுவ வீரர்கள் மனு



திண்டுக்கல், ஆக. 22

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் பூங்கொடி தலைமையில்இன்றுநடைபெற்றது. இதில் முன்னாள் மத்திய துணைராணுவ படைவீரர்கள் 10க்கும் மேற்பட்டோர் கோரிக்கை மனு அளிக்க வந்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது, திண்டுக்கல் மாவட்டத்தில் 300க்கும் மேற்பட்ட முன்னாள் மத்திய துணை ராணுவப் படை வீரர்கள் வசித்து வருகிறோம். 20 வருடங்களுக்கு மேலாக உயிரை பணயம் வைத்து நாட்டுக்காக எல்லை பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு தற்போது ஓய்வு பெற்றுள்ளோம்.

கோயம்புத்தூர், கடலூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் வீட்டு வரி, குடிநீர் வரி ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. அதேபோல் திண்டுக்கல் மாவட்டத்திலும் முன்னாள் மத்திய துணைராணுவபடைவீரர்களுக்கு விலக்கு அளிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# குறு, சிறு நடுத்தர தொழில்களுக்கான சிறப்பு தொழில் கடன் திட்ட முகாம்

ஈரோடு, ஆக. 22

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மாநில அளவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு நிதிக்கழகம் ஆகும். 1949ம் ஆண்டு தொடங்கிய இக்கழகம் மாநில அரசின் ஆதரவுடன் இதுவரை எண்ணற்ற தொழிற்சாலைகளுக்குகடனுதவிவழங்கி தொழில் வளர்ச்சிக்கு முன்னோடி யாக திகழ்கிறது. இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு புதிய தொழிற்சாலைகளை நிறுவு வதற்கும் தற்போது இயங்கி கொண்டிருக்கும் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், உற்பத்தியை பன்முக ப்படுத்து வதற்கும் பல்வேறு சிறப்புத் திட்டதின்கீழ்கடனுதவிவழங்கி வருகிறது. இதையொட்டி ஈரோடு பெரியார் நகரில் உள்ள கிளை அலுவலகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழி ல்களுக்கான சிறப்பு தொழில் கடன் மேளா இன்று (21ந் தேதி) முதல் அடுத்த மாதம் 1ந் தேதி வரை நடைபெ றுகிறது. இச்சிறப்பு தொழில் கடன் மேளாவில் எங்கள் நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களின் சிறப்பு அம்ச ங்கள், மத்திய, மாநில அரசு களின் மூலதனமானியங்கள் புதியதொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் போன்றவை குறித்த விரி வான விளக்கங்கள் தரப்படுகிறது. தகுதி பெறும் தொழில்களுக்கு தமிழக அரசின் 25 சதவீதம் முதலீட்டு மானியம் ரூ.150 லட்சம் வரை வழங்கப்படும். இந்த முகாம் காலத்தில்சமர்பிக்கபடும்பொதுகடன் விண்ணப்பங்களுக்கு ஆய்வு கட்டணத்தில் 50 சதவீத சலுகை அளிக்கப்படும். இந்த வாய்ப்பை புதிய தொழில் முனைவோர் தொ ழிலதி பர்கள் பயன்படுத்தி தொழில்திட்டங்களுடன் வந்து தொழில் கடன் மற்றும் மத்தி ய, மாநில அரசுகளின் மானிய சேவைகளை பயன்படுத்தி கொள்ளலாம் என கலெக்டர் ராஜகோபால் சுன்காரா தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் சட்ட விரோதமான மதுபார்கள் ஒரு இடத்தில் கூட இல்லை: அமைச்சர் முத்துசாமி



ஈரோடு, ஆக. 22

500 மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளதே தவிர புதிதாக எங்கும் கடைகள் திறக்கப்படவில்லை. அத்திக்கடவுஅவினாசி திட்டத்தில் 1045 குளங்களில் 920 குளங்களுக்கு சோதனையோட்டம் முடிக்கப்பட்டுள்ளது

ஈரோட்டில் இன்று பல்வேறுதிட்டப்பணிகளுக்கு அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டினார். பின்னர் அமைச்சர் முத்துசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் டாஸ்மாக்கில் பணியாளர்களுக்கு பாரபட்சம் இல்லாமல் சீனியாரிட்டி அடிப்படையில் 2000 நபர்களுக்கு பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளது. டாஸ்மாக்கில் இரண்டு மாதத்தில் அனைத்தும் கணினி மயமாக்கப்படும் பணிகள் நிறைவு பெறும்.இதன் மூலம் ரசீது உள்பட மதுபானம் விற்பனை அனைத்தும் கண்காணிக்க முடியும். 500 மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளதே தவிர புதிதாக எங்கும் கடைகள் திறக்கப்படவில்லை. பள்ளி, கோவில் மற்றும் மக்களின் புகாரின் அடிப்படையில் கடைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதே தவிர புதிய கடைகள் திறக்கவில்லை. டாஸ்மாக் தொழிற்சாலைகள் கொடுத்த 49 கோரிக்கைகளில் 39 கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. ஊதிய பேச்சுவார்த்தை என்பது நிதி துறை உள்பட மற்ற துறைகளையும் ஒப்பிட்டு செய்யவேண்டிய பணி அனைத்து கோரிக்கைகளுக்கும் தீர்த்து வைக்க வேண்டும் என்பது தான் எங்களது எண்ணம். அத்திக்கடவு அவினாசி திட்டத்தில் 1045 குளங்களில் 920 குளங்களுக்கு சோதனையோட்டம் முடிக்கப்பட்டுள்ளது. ஆற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தால் மீதமுள்ள குளங்களுக்கு சோதனையோட்டம் செய்ய முடியவில்லை. அடிப்படை கால தாமதத்திற்கு காரணம் திட்டத்தின் முகப்பின் நிலம் கையகப்படுத்தல் செய்யாததாலும் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு 26 விவசாயிகள் வீட்டிற்கு சென்று பேசி நிலம் கையகப்படுத்தப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார். மதுவிலக்கு துறையில் தினமும் ரூ. 10 கோடிக்கு ஊழல் நடந்து கொண்டிருக்கிறது என்ற எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டுகூறியுள்ளார். அதுகுறித்து உங்கள் கருத்து என்ன? என்று நிருபர்கள் அமைச்சர் முத்துசாமிடம் கேட்டபோது, அதற்கு மறுப்பு தெரிவித்த அமைச்சர் முத்துசாமி, 3 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை பற்றி எடப்பாடி பழனிசாமி பேசுகிறார். தமிழகத்தில் சட்டவிரோதமாக மதுபான பார்கள் ஒரு இடத்தில் கூட இல்லை. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்க திறந்த மனதோடு தயாராக இருக்கின்றோம் என்றார்.

# சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் இணைய வழி மூலம் நோயாளிகளுக்கு மருத்துவ ஆலோசனை




சென்னை, ஆக. 22

திங்கள் முதல் சனிக்கிழமை வரைகாலை 9 மணி முதல் 12 மணி வரையில், மக்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். சேவையை பெறுவதற்கு http://teleconsultation.s10safecare.com இணைப்பினை உபயோகிக்கலாம்.

நவீனதொலைதொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சி காலகட்டத்தில் தொலை மருத்துவம் என்பது தொலைதொடர்பு இணைப்புகள் மூலம் இத்தகைய மக்களுக்கு வீட்டில் இருந்தபடியே சிறப்பு மருத்துவ நிபுணரிடம் ஆலோசனை பெறுவதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

இது சுகாதார சேவைகளை பயனாளிகள் வீட்டிற்கே எடுத்துச் செல்லும் உன்னதமான முறையாகும். கொரோனா பேரிடர் காலத்தில், தொலை மருத்துவத்தின் மகத்துவத்தை இந்த உலகம் அறிந்தது. சிறப்பு மருத்துவ ஆலோசனை தேவைப்படும்கிராமப்புற மற்றும் நகர்புற பகுதிகளில் இருக்கும் வயதானவர்கள் மற்றும் பயணம் செய்ய இயலாதவர்களுக்கு தொலை மருத்துவம் சிறந்த பரிசாக அமைகிறது. இதை கருத்தில் கொண்டு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தொலை மருத்துவம் எனப்படும் இணைய வழி மருத்துவ ஆலோசனை சேவை மக்களுக்காக சமீபத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். திங்கள் முதல் சனிக்கிழமை வரைகாலை 9 மணி முதல் 12 மணி வரையில், மக்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், குழந்தை நல மருத்துவம், முதியோர் நல மருத்துவம் மற்றும் தோல் நோய் மருத்துவம் ஆகிய துறைகளை சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். 18 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகள்இந்தசேவையை பெறுவதற்கு http://teleconsultation.s10safecare.com இணைப்பினை உபயோகிக்கலாம் என்று டீன் தேரணிராஜன் தெரிவித்துள்ளார்.

# மகளிர் உரிமைத்தொகை திட்டம்: 1 கோடியே 50 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழகம் முழுவதும் பெண்கள் விண்ணப்ப பதிவு




சென்னை, ஆக. 22

விடுபட்டவர்களுக்கான சிறப்பு முகாம்கள் 18ந்தேதி முதல் நேற்று வரை 3 நாட்கள் நடைபெற்றன. மகளிர் உரிமைத் தொகை திட்ட பதிவுக்கான சிறப்பு முகாம்கள் நேற்றுடன் நிறைவு பெற்றது.

மகளிர் உரிமைத் தொகை திட்ட பதிவுக்கான சிறப்பு முகாம்கள் நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளது. ஒரு கோடியே ஐம்பது லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. எதிர்பார்த்த அளவுக்கு விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளது. மகளிர் உரிமைத்தொகை திட்டம் மீண்டும் முகாம் அமைக்க வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். மகளிர் உரிமைத்தொகை திட்டத்துக்கான முதல் கட்ட விண்ணப்பப்பதிவு முகாம் ஜூலை 24ந் தேதி முதல் ஆகஸ்டு 4ந்தேதி வரையிலும், இரண்டாம் கட்ட விண்ணப்ப முகாம் ஆகஸ்டு 5ந்தேதி முதல் 16ந்தேதி வரையிலும் நடைபெற்றது. இரண்டு கட்டங்களாக நடைபெற்ற இந்த முகாமில் ஏறத்தாழ 1 கோடியே 55 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாக பதிவு செய்யப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. விடுபட்டவர்களுக்காக கடந்த ஆகஸ்டு 18ந்தேதி முதல் மூன்று நாள் சிறப்பு முகாம் தொடங்கப்பட்ட நிலையில் நேற்று நிறைவடைந்துள்ளது. மகளிர் உரிமைத்தொகை திட்டத்துக்காக இதுவரை 1.55 கோடி பெண்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் மீது பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன. பரிசீலனைக்கு பின்னர் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதா? நிராகரிக்கப்பட்டதா? என்பது குறித்த விவரம், கைப்பேசி குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்படும். ஆகஸ்ட் இறுதிக்குள் விண்ணப்பங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக கள ஆய்வு பணிகளும் நடத்தப்பட உள்ளன. இதற்காக விவரங்களும் விரைவில் அறிவிக்கப்படும். இந்த நிலையில், வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்காத பயனாளிகளுக்கு ஒலிப்பதிவு செய்யப்பட்ட தொலைபேசி அழைப்பு அனுப்பப்பட்டு உள்ளது. அதில் வங்கி கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்காதவர்கள் உடனடியாக இணைக்கவும் வலியுறுத்தப்பட்டு உள்ளது. மகளிர் உரிமைத் தொகை சிறப்பு முகாம் நிறைவு பெற்ற நிலையில், வங்கிகள் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை வந்துள்ளதாலும் முகாமை மேலும் நீட்டிக்க வேண்டும் என மக்கள் தரப்பில் கோரிக்கை எழுந்துள்ளது. இருந்த போதும் முகாம்கள்நீட்டிக்கப்படவாய்ப்பு இல்லை என்றும் எதிர்பார்த்த அளவிற்கு விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சாலையில் சுற்றி திரிந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு அபராதம்



மாமல்லபுரம், ஆக. 22

செங்கல்பட்டு மாவட்டம்மாமல்லபுரத்தில்உள்ள கிழக்கு கடற்கரை சாலை, பழைய மாமல்லபுரம் சாலை, டி.கே.எம். சாலை, கோவளம் சாலை, ஒத்தவாடை தெரு, ஐந்து ரதம் சாலை, திருக்கழுக்குன்றம் சாலை, கங்கை கொண்டான் மண்டபம் சாலை, மாதா கோவில் தெரு, அண்ணல் அம்பேத்கர் தெரு, ராஜீவ்காந்தி தெரு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக மாடுகள் சாலையின் நடுவே ஆங்காங்கே சுற்றி திரிவதாக மாமல்லபுரம் பேரூராட்சி நிர்வாகத்திற்கு தொடர்ந்து புகார்கள் வந்தது. அதேபோல் சுற்றுலா வாகனங்கள் செல்லாதவாறு மாமல்லபுரம் நகரின் முக்கிய புராதன சின்ன சாலைகளில் சாலையிலேயே மாடுகள் படுத்திருப்பதாக புகார்கள் வந்தவண்ணம் இருந்தது. இந்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்கும் வகையில் மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் வி.கணேஷ், மாமல்லபுரம் பேரூராட்சி தலைவர் வளர்மதி எஸ்வந்த்ராவ் ஆகியோர் மேற்பார்வையில் மாமல்லபுரம் பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் ரகுபதி, துப்புரவு மேற்பார்வையாளர் தாமோதரன் மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் மாமல்லபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றி திரியும் மாடுகளை பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். வாகன ஓட்டிகளுக்கு இடையூறாக சுற்றி திரிந்த மாடுகளை பிடித்தனர். பொது மக்களுக்கு இடையூறாக மாடுகளை பொது வெளியில் திரிய விட்டதாக மாடுகளின் உரிமையாளர்களை கண்டறிந்து அபராதம் விதித்து நடவடிக்கை எடுத்தனர்.

# அர்ஜூன் தாஸ்ஸின் அடுத்த பட அறிவிப்பு



இந்த படத்தின் மூலம் பெரிய நடிகருடன் வேலை செய்ய இருக்கிறேன். அநீதி படத்திற்கு பிறகு கிடைத்த ஆதரவுக்கு நன்றி.

GEMBRIO PICTURES சார்பில் சுதா சுகுமார் தயாரிப்பில், அர்ஜூன் தாஸ், ஷிவாத்மிகா ராஜசேகர் இணைந்து புதிய படத்தில் நடிக்கின்றனர். இந்த படத்தில் காளி வெங்கட், நாசர் ஆகியோர் நடிக்கின்றனர். 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படப்புகழ் விஷால் வெங்கட் இந்த படத்தை இயக்குகிறார். வாழ்வின் வினோதங்களைப் பேசும் கமர்ஷியல் எண்டர்டெயினர் டிராமாவாக உருவாகும் இந்த திரைப் படம், இன்று படக்குழுவினர் கலந்துகொள்ள சிறப்பான பூஜையுடன் இனிதே துவங்கியது. பூஜையை தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் நடிகர் அர்ஜூன் தாஸ் பேசியதாவது, ''இந்த படத்தில், மிகச் சுவாரஸ்யம் காத்திருக்கிறது. நாசர் மாதிரி பெரிய நடிகருடன் வேலை செய்யப் போகிறேன். இமான் சாரின் ரசிகன் நான். அவர் இசையமைக்கும் படத்தில் நடிப்பது மகிழ்ச்சி. ஷிவாத்மிகாவிற்கு வாழ்த்துக்கள்." "விஷால் வெங்கட் மதுரைக்கு வந்து கதை சொன்னார். 3 மணி நேரம் சொன்னார். அப்போதே ஓகே சொல்லிவிட்டேன். அவரை நம்பி முழுமையாக என்னை ஒப்படைத்து விட்டேன். அநீதி படத்திற்கு நீங்கள் தந்த ஆதரவிற்கு நன்றி. இந்தப் படத்திற்கும் ஆதரவு தாருங்கள். தயாரிப்பாளர்களுக்கு இந்தப்படம் வெற்றிப்படமாக இருக்கும் அனைவருக்கும் நன்றி,'' என்று தெரிவித்தார்.



# புன்னகையும் சந்தோஷத்தையும் கொடுப்பேன்: விஜய் தேவரகொண்டா

பான் இந்திய நட்சத்திர நடிகர்களில் ஒருவர் விஜய் தேவரகொண்டா. இவர் முன்னணி நடிகையான சமந்தா உடன் இணைந்து நடித்திருக்கும் படம் 'குஷி' என்ற பெயரில் செப்டம்பர் 1ம் தேதி வெளியாக இருக்கிறது. இந்த படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய இந்திய மொழிகளில் வெளியாகிறது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் சார்பில் தயாரிப்பாளர்கள் நவீன் யெர்னேனி மற்றும் ஒய் ரவிசங்கர் யெலமஞ்சலி ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கும் இந்த திரைப்படத்தை இயக்குநர் சிவ நிர்வானா இயக்கியுள்ளார். ஜி. முரளி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஹேஷாம் அப்துல் வஹாப் இசையமைத்திருக்கிறார். இப்படத்தினை தமிழில் சுபாஷ்கரனின் லைக்கா புரொடக்ஷன்ஸ் நிறுவனத்திற்காக, ஸ்ரீ லட்சுமி மூவிஸ் நிறுவனத்தின் என். வி. பிரசாத் வெளியிடுகின்றனர். இந்த படத்திற்கான பத்திரிக்கையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நாயகன் விஜய் தேவரகொண்டா பல்வேறு தகவல்களை தெரிவித்தார். இது குறித்து அவர் பேசுகையில், '' என்னுடைய தமிழ் பையன்களுக்கும், தமிழ் பெண்களுக்கும் வணக்கம் . இந்தப் படத்தை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் நடித்த குஷி திரைப்படம் செப்டம்பர் 1ம் தேதி வெளியாகிறது. இந்த திரைப்படம் தமிழ் ரசிகர்களுக்கு குஷியை உண்டாக்கும். உங்களை சிரிக்க வைக்கும். 'பெள்ளி சூப்புலு', 'அர்ஜூன் ரெட்டி', 'கீதா கோவிந்தம்'.. காலகட்டத்திலிருந்து நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பிற்கு நன்றி. இந்த திரைப்படம் உங்கள் முகத்தில் புன்னகையும், மனதில் சந்தோஷத்தையும் ஏற்படுத்தும் என உறுதியாக நம்புகிறேன்'' என்றார்.

# மனு ஆனந்த் இயக்கத்தில் ஆர்யா.. சூப்பர் அப்டேட் கொடுத்த படக்குழு..!



ஆர்யா நடிப்பில் உருவாகும் புதிய படம் இன்று துவங்கியதாக படக்குழு அறிவித்து இருக்கிறது. எஃப்.ஐ.ஆர். படத்தை இயக்கிய, இயக்குனர் மனு ஆனந்த் இயக்கும் இந்த படத்தில் ஆர்யாவுடன் கவுதம் கார்திக், சரத்குமார், மஞ்சு வாரியர், அனகா மற்றும் பலர் நடிக்கின்றனர். பிரின்ஸ் பிக்சர் நிறுவனம் தயாரிக்கும் மிஸ்டர் எக்ஸ் படமும் திரில்லர் கதையம்சம் கொண்டிருக்கும் என்று தெரிகிறது. திபு நினன் இசையமைக்கும் இந்த படத்திற்கு ஒளிப்பதிவு வின்சென்ட், கலை இயக்கம் ராஜீவன், படத்தொகுப்பை பிரசன்னா மேற்கொள்கின்றனர். ஆர்யா மற்றும் முக்கிய கதாபாத்திரங்கள் நடிக்கும் காட்சி இன்று படமாக்கப்பட்டது. வரும் வாரங்களில் இந்த படம் தொடர்பான இதர அறிவிப்புகள் வெளியாகலாம். மனு ஆனந்த் கடைசியாக இயக்கிய எஃப்.ஐ.ஆர். படம் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், மிஸ்டர் எக்ஸ் படத்துக்கான எதிர்பார்ப்பும் அதிகரித்து இருக்கிறது.

# சாக்லேட் பையனாக நடித்து போரடித்து விட்டது துல்கர் சல்மான்

அபிலாஷ் ஜோஷி இயக்கத்தில் துல்கர் சல்மான் நடித்து வருகிற 24ந் தேதி வெளியாக உள்ள படம் கிங் ஆப் கோதா. படத்தில் ஐஸ்வர்யாலட்சுமி, சபீர், செம்போன் வினோத், சாந்தி கிருஷ்ணா, அனிகா சுரேந்திரன் உள்பட பலர் நடித்துள்ளனர்.

கேங்ஸ்டர் படமாக உருவாகியுள்ள இந்த படத்தின் விழா அடையாறில் நடந்தது.

விழாவில் பங்கேற்ற துல்கர் சல்மான் கூறியதாவது:

கிங் ஆப் கோதா ஆக்ஷன் நிறைந்த படம். எனக்கு ஒரே மாதிரியாக படம் நடித்து போரடித்து விட்டது. ரொமான்ஸ் ஆகவும் சாக்லேட் பையனாகவும் ஏராளமான படங்கள் நடித்து விட்டேன். ரசிகர்களுக்கே சலிப்பை உண்டாக்கும். இந்தப் படம் ஆக்ஷன் படமாக எனக்கு அமைந்துள்ளது. ஒவ்வொரு படத்திலும் வேறு விதமான கதைகளை தேடி நடித்துக் கொண்டிருக்கின்றேன். இனி எனது ஒவ்வொரு படமும் வித்தியாசமாக இருக்கும்.

உதாரணமாக "கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்" படம் ரொமான்ஸ் திரில்லர் கலந்த கதை. வெற்றி பெற்ற படங்களை ரீமேக் செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. அப்பாவின் எந்த படத்தின் ரீமேக்கிலும் நான் நடிக்க மாட்டேன். படத்தில் ஐஸ்வர்யா லட்சுமி கதாபாத்திரம் சிறியதாக இருந்தாலும் அந்த பாத்திரம் பேசப்படும். இப்போது எனக்கு பிடித்தவர் ஐஸ்வர்யா லட்சுமி தான் என்று கூறினார். இதைத்தொடர்ந்து மனித நேயம் உள்ள கதாநாயகனாக துல்கர் சல்மானை பிடிக்கும் என்று ஐஸ்வர்யா லட்சுமி பதில் அளித்தார்.



# வெங்கட் பிரபு படத்தில் விஜய்க்கு ஜோடி இவங்களா?



தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் விஜய் தற்போது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'லியோ' திரைப்படத்தில் நடித்து இருக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துவிட்டது. அனிருத் இசையமைக்கும் இந்த படத்தில் அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன் என திரைப்பிரபலங்கள் பலர் நடித்துள்ளனர். படப்பிடிப்பை தொடர்ந்து லியோ படத்தின் பின்னணி வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. வரும் அக்டோபர் மாதம் 19ம் தேதி ரிலீசாக இருக்கிறது. இந்த நிலையில், லியோ படத்தை தொடர்ந்து நடிகர் விஜய் நடிக்க இருக்கும் புதிய படம் பற்றிய அறிவிப்பு, யாரும் எதிர்பாராத சமயத்தில் மிகவும் சர்பிரைசாக வெளியானது. தற்போதைக்கு "தளபதி 68" என்று அழைக்கப்படும் இந்த படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு இயக்குகிறார். லியோவை தொடர்ந்து நடிகர் விஜய் வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிக்க இருப்பது உறுதியாகிவிட்ட நிலையில், இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகரிக்க துவங்கிவிட்டது. மேலும் இந்த படத்தின் மற்ற நடிகர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள் யார் யார் என்ற விவரங்கள் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த நிலையில், வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகும் தளபதி 68 படத்தில் விஜய்க்கு ஜோடியாக பிரியண்கா மோகன் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. எனினும், இதுபற்றி அதிகாரப்பூர்வமாக எந்த தகவலும் வெளியாகவில்லை. கல்பாத்தி எஸ் அகோரம் தயாரிக்கும் தளபதி 68 படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இந்த படம் 2024 வாக்கில் வெளியாக இருக்கிறது.



# ஆசிய கோப்பைக்கான 17 பேர் கொண்ட இந்திய அணி அறிவிப்பு திலக் வர்மாவுக்கு இடம்

அணி தேர்வில் முதல்முறையாக பயிற்சியாளரும் சேர்க்கப்பட்டிருந்தார். ரவி சாஸ்திரி கூட அணித் தேர்வுக்கான கூட்டத்தில் இதுவரை பங்கேற்றதில்லை.

உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கு இன்னும் 45 நாட்களே உள்ள நிலையில், அதற்கு முன்பாக 6 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கோப்பைத் தொடர் ஆகஸ்ட் 30 முதல் செப்.17 வரை நடக்கவுள்ளது. இந்நிலையில் 6 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கோப்பைத் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டத்தில் தேர்வுக் குழு அஜித் அகர்கர், தேர்வுக் குழு நிர்வாகிகள், பயிற்சியாளர் ராகுல் டிராவிட் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அணி தேர்வில் முதல்முறையாக பயிற்சியாளரும் சேர்க்கப்பட்டிருந்தார். ரவி சாஸ்திரி கூட அணித் தேர்வுக்கான கூட்டத்தில் இதுவரை பங்கேற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிய கோப்பைக்கான இந்திய அணியில் இளம் வீரர் திலக் வர்மா இடம் பிடித்துள்ளார். வழக்கம் போல சஞ்சு சாம்சன் இடம் பெறவில்லை ஆசிய கோப்பைக்கான இந்திய வீரர்கள் விவரம்: ரோகித் சர்மா, சுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், கேஎல் ராகுல், சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா, இஷான் கிஷன், அக்சர் படேல், ஜடேஜா, ஹர்திக் பாண்டியா, சர்துல் தாகூர், பும்ரா, ஷமி, சிராஜ், குல்தீப் யாதவ்.பிரதிஷ் கிருஷ்ணா. ரிசர்வ் வீரர்: சஞ்சு சாம்சன் இதே அணி தான் உலககோப்பைத் தொடருக்கும் பயணம் செல்ல அதிக வாய்ப்புள்ளது.

# உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்: பிரனோய் முதல் சுற்றில் வெற்றி

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் பிரனோய் பின்லாந்தின் கால்லே கோல்ஜோனெனுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் பிரனோய் 24:22, 21:10 என்ற கணக்கில் வென்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

28வது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி டென்மார்க் தலைநகர் ஹோபன்ஹேகன் நகரில் இன்று தொடங்கி 27ந்தேதி வரை நடைபெறுகிறது. இதில் ஆண்கள் பிரிவில் எச்.எஸ்.பிரனாய், காமன்வெல்த் விளையாட்டு சாம்பியன் லக்ஷயா சென், இரட்டையர் உலக தரவரிசையில் 2வது இடம் வகிக்கும் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி சிராக் ஷெட்டி ஜோடியினர், பெண்கள் பிரிவில் பி.வி.சிந்து ஆகிய இந்தியர்கள் பதக்கம் வெல்வதற்கான வாய்ப்பில் உள்ளனர்.

இந்நிலையில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் பிரனோய் பின்லாந்தின் கால்லே கோல்ஜோனெனுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் பிரனோய் 2422, 2110 என்ற கணக்கில் வென்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.





# உலக கோப்பை செஸ்: இறுதி போட்டிக்கு முன்னேறிய இளம் வீரர் ஆனார் பிரக்ஞானந்தா!

உலக கோப்பை செஸ் அரையிறுதியில் உலகின் 3ம் நிலை வீரரான ஃபேபியானோவை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா. உலக கோப்பை செஸ் இறுதிப் போட்டியில் கார்ல்சனை பிரக்ஞானந்தா எதிர்கொள்கிறார்.

உலக கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானில் உள்ள பாகு என்ற நகரில் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதியில் இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த பிரக்ஞானந்தா உலக தரவரிசையில் 3வது இடத்தில் உள்ள அமெரிக்காவின் பேபியானோ கருணாவுடன் மோதினார்.

நேற்று முன்தினம் நடந்த முதல் ஆட்டத்தில் கருப்பு நிற காய்களுடன் விளையாடிய பிரக்ஞானந்தா 78வது காய் நகர்த்தலில் டிரா செய்தார். அரை இறுதி சுற்றின் 2வது ஆட்டம் நேற்று நடந்தது. இதில் வெள்ளை நிற காய்களுடன் பிரக்ஞானந்தா ஆடினார். 47வது காய் நகர்த்துக்கு பிறகு இந்த ஆட்டமும் 'டிரா' ஆனது.

இதைத்தொடர்ந்து டைபிரேக்கர் சுற்று நடத்தப்பட்டு, இதில் வெற்று பெறுவோர் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும் என்ற நிலை உருவானது. அதன்படி டைபிரேக்கர் சுற்றில் பிரக்ஞானந்தா, உலகளவில் மூன்றாம் இடத்தில் உள்ள வீரரான ஃபேபியானோ கருணாவை எதிர்கொண்டு விளையாடினார். பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் பிரக்ஞானந்தா தன்னை எதிர்த்து விளையாடிய கருணாவை 3.52.5 புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தினார். இதன் மூலம் பிரக்ஞானந்தா இறுதி போட்டிக்கு முன்னேறி இருக்கிறார். இறுதிப் போட்டியில் பிரக்ஞானந்தா மேக்னஸ் கார்ல்சனுடன் மோத இருக்கிறார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.